# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2287/16 - 2022 ජූලි මස 05 වැනි අඟහරුවාදා - 2022.07.05

*2287/16 ஆம் இலக்கம் - 2022 ஆம் ஆண்டு யூலை மாதம் 05 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

***2017 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, வெளிநாட்டுச் செலாவணிச் சட்டம்***

*8 ஆம் பிரிவின் கீழான கட்டளை*

*2017 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் (சட்டம்) 8 ஆம் பிரிவின் (1) ஆம் துணைப்பிரிவின் பந்திகள் (அ) மற்றும் (ஆ) இனால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு, நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க ஆகிய நான், 2284/34 ஆம் இலக்க 2022, யூன் 16 ஆந் திகதியிடப்பட்ட அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்ட சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழ் வழங்கப்பட்ட கட்டளை மூலம் திருத்தப்பட்ட 2213/39 ஆம் இலக்க 2021, பெப்புருவரி 03 ஆந் திகதியிடப்பட்ட அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்ட சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழ் வழங்கப்பட்ட கட்டளையினை பின்வருமாறு மேலும் திருத்துகின்றேன்;*

*கட்டளையின் அட்டவணையின் பகுதி III இன் பந்தி (1) மற்றும் (2) இன் கீழ் வழங்கப்பட்ட பதினான்கு (14) வேலை நாட்களைக் கொண்ட பொதுமன்னிப்பு காலப்பகுதி 2284/34 ஆம் இலக்க 2022, யூன் 16 ஆந் திகதியிடப்பட்ட அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் வழங்கப்பட்ட பதினான்கு (14) வேலை நாட்களைக் கொண்ட காலப்பகுதி முடியும் நாளிலிருந்து மேலும் பதினான்கு (14) வேலை நாட்களைக் கொண்ட காலத்திற்கு நீடிக்கப்படுகிறது மற்றும் அதற்குப் பிந்திய காலத்திற்கு அல்ல.*

**ரணில் விக்கிரமசிங்க,**
*நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும்*
*தேசிய கொள்கைகள் அமைச்சர்.*

*நிதி அமைச்சு,*
*கொழும்பு 01,*
*2022, யூலை 05.*


1A - G 037045 — 41 (2022/07) இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*